திரு. நா. சா. பழனிசாமி : கிராமத்திலே இருந்து நகரத்திற்கு வரும் மாணவர்களுக்கு இலவசமாக பஸ் பாஸ் வழங்கி அவர்களும் நல்ல கல்வி கற்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கின்றார்கள். கிராமத்திலே இருந்து, நகரத்திற்கு பேருந்திலே பயணம் செய்வதற்கு மாணவர்களுக்கு இலவச பாஸ் வழங்கிக்கொண்டு தான் இருக்கிறோம். அதிலே ஏறத்தாழ இந்தஅரசுக்கு 24 கோடி ரூபாய் செலவாகிக்கொண்டு இருக்கிறது. கிராமத்திலே இருக்கின்ற மாணவர்கள் நகரத்திற்கு வர வேண்டும் என்பதற்காக அக்கறை எடுத்து, கிராமந்தோறும் பேருந்துகள் வசதி செய்ய வேண்டும் என்பதற்காக இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு 393 பேருந்துகள் இயக்கத்தில் இருக்கிறது. தி.மு.க. ஆட்சியிலே நிறுத்தப்பட்ட 1,205 பேருந்துகளில் இப்போது 974 பேருந்துகளை இயக்கிக்கொண்டு இருக்கிறோம் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 167. டாக்டர் வெ. புருஷோத்தமன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

167—

பென்னாகரத்தில் கூட்டுறவு நூற்பாலை.

*1058 டாக்டர் வெ. புருஷோத்தமன் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பென்னாகரம் தொகுதியில் அரசு கூட்டுறவு நூற் பாலை நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கே இடமில்லை,

1992 மார்ச் 11]

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் ஆட்சியில் தான் தர்மபுரி மாவட்டத்திலே பென்னாகரம் தொகுதியை தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய வட்டமாக அறிவித்து இருக்கிறார்கள். அதற்கு எங்களது இதயபூர்வமான நன்றி. இன்று வரை எந்தத் தொழிற்சாலையும் இல்லாத ஒரு தொகுதி, மக்களுக்கு வேலை வாய்ப்புக் கூட இல்லாத மிகவும் புறக்கணிக்கப்பட்ட அந்த தொகுதியில் 1981–82-ல் தர்மபுரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்த மண் வளம், நீர் வளம் ஆகியவை ஆய்வு செய்யப்பட்டு, இடமும் தேர்வு செய்யப்பட்டு, ஆனால் 1983-லே ஊத்தங்கரைக்கு எந்தவிதக் காரணமும் இன்றி அந்த நூற்பாலையைக் கொண்டு சென்றுவிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று பதில் சொல்லிவிட்டார்கள். இருந்தாலும், திருப்பூர் பனியன் ஓசியரி நூலுக்கு அதிக தேவை இருக்கிறது. வெளி நாடுகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. அன்னியச் செலாவணியும் கிடைக்கக்கூடிய நிலை இருக்கிறது. வெளி மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது. ஆகவே இப்படிப் பட்ட ஓசியரி நூல்கள், 25 ஆயிரம் கதிர்கள் கொண்ட கூட்டுறவு நூற்பாலையை தமிழ்நாட்டிலே முதலாவதாக எனது தொகுதியில் ஆரம்பிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் ஊத்தங்கரையில் தர்மபுரி கூட்டுறவு நூற்பாலை 25 ஆயிரம் கதிர்களோடு செயல்பட்டு வருகிறது. தவிர மிகவிரைவில் 22 கோடி ரூபாய் செலவில் நம்முடைய தமிழகத்தின் ஒப்பற்ற தலைவி, தாயுள்ளம் கொண்ட தலைவி, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தாயாரான அன்னை சந்தியா அவர்கள் பெயரால் பர்கூரில் முழுமையாக பெண்களையே கொண்ட ஒரு நூற்பாலையை உருவாக்க இருக்கிறோம். அது உங்களுடைய மாவட்டத்தில் வருகிறது. அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

168— முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 168. திரு. ம. தனபால். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்,

கோவளம் மேம்பாலம் சீர்செய்தல்.

*230 திரு. ம. தனபால் :

53-477—4